**கவனிக்க.-** *04.07.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1871 - 2014 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2014.07.11

*1871 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1036 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1037 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1043 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1047 |
| ஏல விற்பனைகள் | 1051 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஓகத்து மாதம் 1 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

**இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 04 Nos. 5 TONNE GVW 4WD WIDE CREW CABS இன் பெறுகை**

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு 04 Nos. 5 TONNE GVW 4WD WIDE CREW கெப்களை (CABS) வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை கொழும்பு, த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்கள், 2014, யூலை 18 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு "கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், பொது முகாமையாளர் அலுவலகத்தில்" மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 5,000 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2014, யூலை 17 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள், அவைகளை மூடியதும் உடனடியாகவே கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது, விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைத் திணைக்களம்,
த. பெ. இல. 1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2438078 அல்லது 94(11)2473328.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்-அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்).

தொடர்பிலக்கம் SRS/F. 6941.

7-314

# ஆய விற்பனையும் குத்தகையும்

## அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2015

அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கை பிரசைகள் அல்லாதவர்களின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணை குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியாது. 5 பேருக்கு மேல் ஒன்றாகச் சேர்ந்தோ அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கலாம்.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "அம்பாந்தோட்டையின் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2015" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2014.08.04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப்பணமாக கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2014.08.04 மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2014.10.01 என கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களிடம் விண்ணப்பித்து தெரிந்துகொள்ளலாம்.

வை. கே. சிரோமி ஜீவமாலா,
பிரதேச செயலாளர்,
அம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2014, யூன் 18.

### அட்டவணை

### அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை - 2015

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 2014.08.04<br>மு. ப. 10.00 | மு.ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

7-201

## கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு மற்றும் வெளிநாட்டு குடிவகைக்கான தவறணைகள் குத்தகைக்கு கொடுத்தல் - 2015

*1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டினது வெளிநாட்டுக் குடி வகைகளையும் (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) தவறணைகளில் விற்பனை செய்வதற்கு குத்தகைக்கு கொடுப்பதற்கானதும் அக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல கலால் வரிகளுக்கும் உட்பட்டு 2015 ஆம் ஆண்டிற்குள் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காணப்படும் கள்ளுத் தவறணைகளினதும் வெளிநாட்டு மதுபான சாலைகளினதும் (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பிரதேச செயலாளர் ஊடாக 2014.08.07 மற்றும் 2014.08.08 ஆந் திகதிகளில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட நேரம் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. (அ) சகல கேள்விப்பத்திரங்களும் இத்தீவின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.*

*(ஆ) கேள்விப்பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப்பணத்தினை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.*

*(இ) பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட கேள்விதாரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். (கேள்விப்பத்திரம் மற்றும் அத்தாட்சிகளை சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணை, வெளிநாட்டு மதுபான சாலைகளினது குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்).*

*(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கீழ்வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்தில்கொள்ள வேண்டும் :-*

(i) *கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித் தொகை எழுத்து மூலமாகவும் இலக்கம் மூலமாகவும் குறிப்பிடப்படல் வேண்டும் ;*

(ii) *பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடல் வேண்டும் ;*

(iii) *பத்திரத்தில் திருத்தங்கள் மேற்கொண்டால் அந்த இடத்தில் கையொப்பமும் திகதியும் இடப்படல் வேண்டும் ;*

(iv) *சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.*

*மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், பிணைப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதிக்கு முன் பிரதேச செயலாளர் அலுவலக கேள்விப்பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்புவதாயின் கொத்மலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு முன் கேள்விதாரர் பிரதேசசெயலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.*

*5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

*6. குறிப்பிட்ட ஏல விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட 3 மாத பிணைப்பணத்தினை கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.*

*மேற்படி வைப்புப் பணம் புஸ்ஸல்லாவ, இலங்கை வங்கியில் உள்ள பிரதேச செயலாளரின் கணக்கில் ஒரு வருட சேமிப்பாக வைப்புச்செய்ய குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி வைப்பு காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைக் கட்டணத்தை செலுத்தி குத்தகைக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.*

*7. நியமிக்கப்படும் தவணைக் கட்டணத்தை மாதாந்தம் காசாக செலுத்தக்கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதி உடையவர் ஆவர்.*

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

9. ஏதாவது ஒரு தவறணை குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து கள்ளுத் தவறணை 2014.10.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும், வெளிநாட்டு மதுபான தவறணை 2014.10.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும் இந்த நிலையத்தில் குத்தகைக்கு விடப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக இறுதி தீர்மானம் என்னுடையதாகும்.

11. இது தொடர்பான மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2014, யூன் 17.

**அட்டவணை**

| இல. | கள்ளுத் தவறணையின் பெயர் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கடதொரப்பிட்டியா | கடதொரப்பிட்டிய கிராமம் | 2014.08.07 மு. ப. 10.30 | 1,000.00 |
| 2 | ஓத்தலாவை | தேர்ந்தெடுக்கப்படும் இடத்துக்கு பிரதேச செயலாளரினால் அனுமதி வழங்கப் பட்ட கடிதம் சமர்ப் பிக்கப்பட வேண்டும் | 2014.08.07 மு. ப. 10.30 | 1,000.00 |
| 3 | கட்டுகித்துல | கட்டுகித்துல கிராமம் | 2014.08.07 மு. ப. 10.30 | 1,000.00 |

**வெளிநாட்டுக் குடிவகை தவறணை**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | பூண்டுலோயா | மேட்டுக்கடை வீதி, பூண்டுலோயா | 2014.08.08 மு. ப. 10.30 | 3,000.00 |

7-233

---

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு தவறணைகளை குத்தகைக்கு வழங்கல் - 2015

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளு தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2015 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2014.08.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் குறிப்பிட்ட கள்ளு தவறணை விற்கும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கேள்விகளை சமர்ப்பிப்பவர்களுக்கு இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்டு பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளு தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகை 2014.10.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

யூ. பீ. இந்திக்க அநுருத்த பியதாச,
உடபலாத்த பிரதேச செயலாளர்.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2014, யூன் 18.

***அட்டவணை***

***2015 ஆம் ஆண்டிற்கு கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் அட்டவணை***

| தொடர் இலக்கமும் பிரிவுப் பெயரும் | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. வஹுகபிட்டிய | உடபலாத்த வஹுகபிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br><br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2014.08.12, மு. ப. 10.30 மணி | 1,500 |
| 1. புஸ்ஸல்லாவ | உடபலாத்த புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br><br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2014.08.12, மு. ப. 10.30 மணி | 3,000 |

7-200/1

---

**கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2015**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2015 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2014.08.14 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் -

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற கேள்விப்பத்திரங்களும் உரிய காலத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு மேற்படி மதுவகை தவறணைகள் பற்றிய நிபந்தனைப்பத்திரத்தில் கையொப்பம் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்வியை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையில் பாதுகாப்பு கருதி இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய கள்ளுத் தவறணைகளை மீண்டும் 2014.10.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

டி. எம். என். ஜீ. ஜீ. டி. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2014, யூன் 25.

### அட்டவணை

### கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளையில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2015

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் கண்டி மாவட்டத்தில் வட்டார இல. 2 இல் இல. 20 மாகாயாவ மற்றும் இல. 76 மாப்பனாவ பிரிவுகள் | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 7 - மாபனாவதுர அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2014.08.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

### கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2015

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

7-374/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல. 17, சன்டவுண் ட்றைவ், பெல்போர்ட், நியூயோர்க் 11713 எனும் முகவரியில் வசிக்கும் ருவன் பெரேரா எனப்படும் சோலங்க ஆரச்சிகே தொன் ருவன் பத்மப்ரிய பெரேரா (கடவுச்சீட்டு இலக்கம் 214679393) ஆகிய நான் குருநாகல், வெலங்கொல்ல வீதி, இல. 100சீ எனும் முகவரியில் வசிக்கும் சோலங்க ஆரச்சிகே தொன் சமிந்த கீதக்க பெரேரா எனப்படுபவருக்கு நியூயோர்க் பிரபல நொத்தாரிசு ஜெப்ரி எம். றொபட் அவர்களினால் எழுதப்பட்டு உறுதிசெய்யப்பட்ட வடமேல் மாகாணத்தின் வடமத்திய பிராந்திய பதிவாளர் திணைக்களத்தில் 2012.04.05 ஆந் திகதிய 52 ஆம் இலக்கக அற்றோணி அதிகாரப் புத்தகத்தின் 3588 ஆம் பகுதியில் 1092 பத்திருவில் பதிவுசெய்யப்பட்டுள்ள 2012.03.09 ஆந் திகதிக்குரிய விசேட அற்றோணி அதிகாரப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த சகல அதிகாரங்களும் 2014.06.23 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட சோலங்க ஆரச்சிகே தொன் சமிந்த கீதக்க பெரேரா எனப்படுபவர் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் அல்லது செயற்பாடுகளுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பற்றவன் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சோலங்க ஆரச்சிகே தொன் ருவன் பத்மப்ரிய பெரேரா.

7-223

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சூரியவெவ, எம்பிலிப்பிட்டி வீதி, இல. 9 ஆவது மைல் கல்லைச் சேர்ந்த குணரத்ன சபாபதி கமகே கிறிசாந்த பிரதீப் குமார (790820126V) ஆகிய நான், செவனகல, மிஹிந்துகம, இல. 705 ஐச் சேர்ந்த சரத் பத்மேந்திர கமகே என்பவருக்கு அளித்த இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஜீ. திலான் லங்கா ரவீந்திர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 30 நவெம்பர், 2013 ஆந் திகதியிடப்பட்ட 1216 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழிக்கின்றேன் எனவும், சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தினால் சொல்லப்பட்ட அற்றோணிதாரரால் புரியப்படும் பணக் கொடுக்கல் வாங்கல் அல்லது வேறேதேனும் செயல்களுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குணரத்ன சபாபதி கமகே கிறிசாந்த பிரதீப் குமார.

7-330

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தாராபுரம், மன்னாரைச் சேர்ந்த தற்பொழுது இல. 23, சித்தார்த்த மாவத்தை, மாபோலை, வத்தளையில் வசிப்பவர்களான (1) செய்னுலாப்தீன் உசைர், (2) செய்னுலாப்தீன் அப்துல் கதீர், (3) உமைரா பெண் அஷர் ஆகிய நாங்கள் புதுக்குடியிருப்பு,

எருக்கலம்பிட்டி, மன்னாரைச் சேர்ந்த மொஹமட் ரிஷான் ஷேக் அமானீ என்பவருக்கு மன்னாரைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். பி. பாரூக் என்பவரினால் 8812 ஆம் இலக்க 19.11.2010 ஆந் திகதியிடப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப் பட்டதும் யாழ்ப்பாணம் உப பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 31.03.2011 ஆந் திகதி, தொகுதி 975, பக்கம் 85, இல. 38 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றோம் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் எமது சார்பில் செய்யப்படும் எந்தச் செயலுக்கும் நாம் பொறுப்பெடுக்க மாட்டோம் என்றும் அத்தகைய செயல்கள் எதனையும் நாம் ஏற்றங்கீகரிக்க மாட்டோம் என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறோம்.

(1) செய்னுலாப்தீன் உசைர்,
(2) செய்னுலாப்தீன் அப்துல் கதீர்,
(3) உமைரா பெண் அஷர்

7-203

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எஸ். அன்ட் எம். டிவலொப்மென்ட் அசோசியேட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 98582
திகதி : 16.05.2014
கம்பனியின் பதிவு முகவரி : இல. 27, பெப்பிலியான வீதி, நுகேகொடை

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2014, மே 28.

7-216

---

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : வர்டுசோ பவர்வெயா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4079
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : கெவில்டன் இலெக்ட்ரிகல் புறொடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 30.05.2014

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

7-212

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரொவிக் லங்கா (பீவீரீ) எல்ரீடி
பதிவு இலக்கம் : பீவீ 98608
கூட்டிணைப்புத் திகதி : 19.05.2014
பதிவு முகவரி : இல. 12, கோதமி மாவத்தை, கல்கிஸ்ஸ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ் எட்வைசரி சேர்விசெஸ் (பீவீரீ) எல்ரீடி-பீவீ 259,
கம்பனிச் செயலாளர்கள்.

7-193

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சுசன்த எக்ஸ்போட்ஸ் (பீவீரீ) எல்ரீடி
பதிவு இலக்கம் : பீவீ 97267
பதிவு முகவரி : இல. 2, முதலாம் மாடி, சிட்டி வீவ் சொப்பிங் கொம்ப்லெக்ஸ், டெல்பட் டவுன், காலி
கூட்டிணைப்புத் திகதி : 2014.02.26

மதுரப சதுரங்க ஹெட்டிகம,
கம்பனிச் செயலாளர்.

7-192

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டீ எஸ் மைக்ரோ கிரேடிட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 99148
கூட்டிணைப்புத் திகதி : 17.06.2014
பதிவு முகவரி : இல. எப்/6/6, மத்திய பஸ் தரிப்பிடம், குருநாகல்

கம்பனிப் பணிப்பாளர்.

7-190

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், பின்வரும் கம்பனி 2014, யூன் 11 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

*கம்பனியின் பெயர் :* இன்டர்நஷனல் ஷிப்பிங் பியுரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 99079
*பதியப்பட்ட விலாசம் :* இல. 9டி, பொன்சேக்கா பிளேஸ், கொழும்பு 4

ஜே. சீ. அன்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா அவெனியூ,
கொழும்பு 7.

7-313

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*ஜீ ரீ வீ நெட்வேர்க்ஸ் (பீவீரீ) எல்ரீடி 09.05.2014 ஆந் திகதி கூட்டிணைக்கப்படுறது.*

*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 98497
*பதிவு முகவரி :* இல. 5/21, சுலைமன் டெரஸ், கொழும்பு 5

த்ரீ எம் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-282/1

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 16, 1/2, 1 ஆம் சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தையில் வசிக்கும் லீலாவதி கந்தப்பு ஆகிய நான், இத்தால் அறியத்தருவது, நொத்தாரிசு ஆ. தவநேசன் அவர்களினால் 2003.08.09 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 3682 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு, அரசடி றோட்டைச் சேர்ந்த கனகசபை இந்திரலிங்கம் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டது. தற்பொழுது 2013.10.01 ஆந் திகதியிலிருந்து குறித்த அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் அதிகாரத்தை இல்லாதொழித்து, இதன்பின் நடக்கும் காரியங்களுக்கு நான் பொறுப்பல்ல எனவும் வெளிப்படுத்து கின்றேன்.

லீலாவதி கந்தப்பு.

7-180

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* மாஸ்டர்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 99116
*பதிவுத் திகதி :* 2014, யூன் 16
*கம்பனி முகவரி :* இல. 106/5, ஜாவத்தை வீதி, கொழும்பு 5

7-380

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்கொடை, கொத்தட்டுவ, கொலன்னாவை வீதி, இலக்கம் 210 ஐ வசிப்பிடமாகக் கொண்ட சந்திரசேன கஸ்தூரியாராய்ச்சி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அன்பாக அறியத்தருவது யாதெனில், ஏஷியன் ஃபினான்ஸ் லிமிட்டெட்டிற்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். எல். வீ. த சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தியதும் 2013, ஒகத்து மாதம் 26 ஆந் திகதியிடப்பட்டதும் 1234 ஆம் இலக்கத்தையும் கொண்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2013, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அமுலுக்கு வரும் வகையில் நான் இரத்துச் செய்கின்றேன்.

சந்திரசேன கஸ்தூரியாராய்ச்சி.

7-275

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

எத்கந்துர, நுகேகொட, பௌத்த மத்திய நிலையத்தை வதிவிடமாகக் கொண்ட வணக்கத்திற்குரிய வெலிவிட்டியே சுஜீவ தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பது யாதெனில், 2014.03.31 ஆந் திகதி தொடக்கம் லங்கா ஹேவகே சுமல் ஷாந்த சிறிக்கு என்னால் வழங்கப்பட்டதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. டீ. எல். பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப் பட்டதும் 13 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2013, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதியிடப்பட்டதும் (குறித்த) அற்றோணி தத்துவத்தை இத்தால் நான் இரத்துச் செய்கின்றேன்.

வெலிவிட்டியே சுஜீவ தேரர்.

7-276

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* றொஹான் ஸ்டூடியோ அன்ட் டிஜிட்டல் கலர் லெப் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம் : பீவீ 90903*
*கூட்டிணைப்புத் திகதி : 2013.02.07*
*பதிவு முகவரி* : தர்மாலோக்க மாவத்தை, எவரிவத்த, கட்டுநாயக்க,

கம்பனிச் செயலாளர்.

7-315

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாரவில, ஸ்ரீ ஹர்பேட் சில்வா மாவத்தை, இல. 466/ஏ எனும் விலாசத்தில் வசிக்கும் ஹெட்டிஆரச்சிகே ரெம்பிள் ஸ்கொலொஸ்ரிக்கா பெரேரா ஆகிய நான், மாரவில, ஸ்ரீ ஹர்பேட் சில்வா மாவத்தையில் வசிக்கும் ஹெட்டிஆரச்சிகே லொரேட் கனீசியஸ் பெரேரா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டிருந்த, சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எச். ஜே. எம். டி. ஜயசிங்கவால் 1997, ஓகத்து 23 ஆந் திகதியன்று எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 8473 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்ற தென்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஹெட்டிஆரச்சிகே ரெம்பிள் ஸ்கொலொஸ்ரிக்கா பெரேரா.

7-332

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

எம் ஹெல்த் (பீவீரீ) எல்ரீடி 20.05.2014 ஆந் திகதி கூட்டிணைக் கப்படுறது.

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 98636
*பதிவு முகவரி* : இல. 5/21, சுலைமன் டெரஸ், கொழும்பு 5

த்ரீ எம் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-282/2

---

## அறிவித்தல்

கெஸ ரோயல் (பிறைவேட்) லிமிட்டெட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்படல் தொடர்பாக அறிவிக்கப்படுகின்றது :-*

கெஸ ரோயல் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி யொன்று 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி பீவீ 99238 ஆம் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இல. 365/5, செல்லகந்தர வீதி, நீர்கொழும்பில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் அறியத்தருகிறோம்.

கந்தையா நீலகண்டன்,
தலைவர்.
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

7-279

---

## பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* ரென் இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*இணைத்த திகதி* : 17.06.2014
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 99144
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி* : இல. 205, தம்புள்ள வீதி, குருநாகல்

7-277

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* எல் எவென்யூ (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 99177*
*கூட்டிணைப்புத் திகதி : 18.06.2014*
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 30, கடை இல. 19, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

7-238

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* த்ரீ லொஜிகல் புறொடக்ட்ஸ் அன்ட் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம் : பீவீ 97990*
*கூட்டிணைப்புத் திகதி : 03.04.2014*
*பதிவு முகவரி : இல. 14சீ, பெயார் மவுன்ட் ரெஸிரெடன்ஸ், புத்கமுவ வீதி, ராஜகிரிய*

பணிப்பாளர்.

*7-318*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : எவனிர் ஜரீ (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவிலக்கம் : பீவீ 91115*
*கூட்டிணைப்புத் திகதி : 2013.02.19*
*பதிவு முகவரி : இல. 12/35, நிதஹாஸ் மாவத்தை, லேவெல வீதி, கண்டி*

*7-341*

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : எஸ் ஜீ எப் கேயா ஏவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவிலக்கம் : பீவீ 99063*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.06.19*
*பதிவு அலுவலகம் : இல. 339, காலி வீதி, கொழும்பு 3*

*கம்பனியின் பெயர் : ஈகள் கிரவுண்ட் ட்ரான்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவிலக்கம் : பீவீ 99242*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.06.20*
*பதிவு அலுவலகம் : இல. 209, 3 ஆவது மாடி, தர்மபால மாவத்தை, கொழும்பு 7*

பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*7-350*

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பிறநாட்டு குடிவகைத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2015

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக பிறநாட்டு குடிவகைகள் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2015 ஆம் ஆண்டினுள் பிறநாட்டு குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2014.08.15 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்பு பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்விதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விதாரர்களுக்கு மேற்படி பிறநாட்டு குடிவகை தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்வி விண்ணப்பப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விதாரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற கேள்விப்பத்திரங்களும் உரிய காலத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட-

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தவறணையின் இலக்கமும் பெயரும்'' குறிப்பிடப்பட்டு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக, கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான அளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அவர்கள் ஒவ்வொருவரினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. பிறநாட்டு குடிவகை தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க்கணக்கில் பிறநாட்டு குடிவகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையில் பாதுகாப்பு கருதி இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க பிறநாட்டு குடிவகைகள் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்கவேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக்கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய பிறநாட்டு குடிவகை தவறணைகளை மீண்டும் 2014.10.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

டி. எம். என். ஜீ. ஜீ. டி. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2014, யூன் 25.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்- 2015**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டெண்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | 1. கண்டி நகரத்தில் இல. 17 யட்டி நுவர மற்றும் இல. 18 கொட்டுகொடல்லை வீதி | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொட்டு கொடல்ல வாக்கெடுப்பு பிரிவுக்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி, வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2014.08.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**பிற நாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2015**

இல. 01 பிறநாட்டு குடிவகை தவறணை குத்தகை - ரூபா 5,000.00

7-374/2

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகைக்கு விற்றல்- 2015**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும், ஏற்புடையதான பிற நாட்டு நடைமுறைக்கு வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2015 ஆம் ஆண்டில் பிறநாட்டுக் குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2014.08.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திரங்களையும் மற்றும் சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு வேண்டப்படும் தேவைகளுக்கு உட்படாத கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்** -

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டுடனும் ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும் இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு இடப்பட வேண்டும். அல்லது உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டுக் குடிவகை தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அல்லது அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2014.10.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

யூ. பீ. இந்திக்க அநுருத்த பியதாச,
உடபலாத்த பிரதேச செயலாளர்.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2014, யூன் 18.

**அட்டவணை**

**கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளின் பட்டியல் - 2015**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸல்லாவ | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2014.08.13 மு. ப. 10.30 மணிக்கு | 3,000 |

7-200/2

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீஎல்சீ - நுகேகொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*''கடன்பட்டோர்'' என்ற வகையில் நுகேகொடையைச் சேர்ந்த சுமித் விஜேசிங்க எக்கநாயக்க மற்றும் நுகேகொடையில் தலைமை அலுவலக பதிவிலக்கம் என்(பீவீஎஸ்) 20493 இன்கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய மே./பா., ஒவின் கேஸ்சஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப் பட்ட சொத்து.*

### 1 ஆவது ஏலவிற்பனை

வடமேல் மாகாணம், சிலாபம் மாவட்டத்தில், வட பிட்டிகல் கோரள, முன்னேஸ்வரம் பத்து ஹீனஹஸ்வில மற்றும் மாதம்பே தெமட்டபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பயிர்த்தோட்டம், மணல் மற்றும் அனைத்தையும் கொண்ட ''ஹீனஹஸ்வில எஸ்ட்டேட்'' என்று அழைக்கப்படுகின்ற காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். பெரேரா என்பவரால் 27.04.1959 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 5533 துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டு அறியப்பட்ட காணி முப்பது ஏக்கர் (30ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் அதே இடத்தில் 2014, யூலை 31 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- சிலாபத்திலிருந்து கொழும்பு வீதி மார்க்கமாக காக்காபள்ளி சந்திவரைச் சென்று அங்கு உள்ள 46 ஆவது மைல் போஸ்ட்டின் இடதுபக்கமாக உள்ள மெதகம வீதியால் 4 ஆவது மைல் போஸ்ட் வரை சென்று அங்கிருந்து 50 மீற்றர் தொடர்ந்து சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடதுகைப் பக்கத்தில் அமைந்திருக்கும்.

### 2 ஆவது ஏலவிற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரள, பல்லேபத்து கோட்டே நகரசபை எல்லைக்குட்பட்ட நுகேகொடையில் பொதுவாக ஸ்டேசன் வீதி என்று அழைக்கப்பட்ட ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையில் அமைந்துள்ள அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பயிர்த்தோட்டம், மணல் மற்றும் அனைத்தையும் கொண்ட ''கொட்டனுவே கும்புர'' என்று அழைக்கப்படுகின்ற காணி, உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் ஜீ. எல். பி. நாணயக்கார என்பவரால் 02.09.1979 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1507 துண்டு 4ஏ1 எனக் குறிப் பிடப்பட்டு அறியப்பட்ட காணி இருபத்துமூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணத்தை நில வரைபட இல. 1507 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் அதே இடத்தில் 2014, யூலை 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- நுகேகொடையிலுள்ள நிற மின் விளக்குகள் இடத்திலிருந்து ஸ்டேன்லி மாவத்தை மார்க்கமாகப் புறப்பட்டு சுமார் 300 மீற்றர் தொலைவில் வரிமதிப்பீட்டிலக்கம் 221, ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையின் இடதுகைப் பக்கத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.04.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.04.07 ஆந் திகதி ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' பத்திரிகைகளையும் மற்றும் 2014.04.04 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1%) (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட் களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொ.பே. 2456476, 2456480.

துசித கருணாரத்ன (ச.நீ),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

7-316

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — நகர அலுவலக கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***வத்தளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹெந்தல கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹ பாதையில் வரிமதிப்பீட்டு இல. 26ஏ எனும் தல்கஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2601 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். (அத்துடன் மேற்கூறிய வரைபடத்தில் லொட் 4 இன் ஊடாகவும் மேலாகவும் பாதையை உபயோகிக்கும் உரிமையுடன்)***

***(பரப்பளவு : 15 பேர்ச்சஸ்)***

*(இவ்வாதனம் கஹந்தவிட கமகே தொன் எலோய் பிரியந்த குணவர்தன என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- ஹெந்தகல சந்தியிலிருந்து ஹெந்தல பாதையில் மருதானைப் பாதை வரை சென்று மேலும் சற்று தூரம் சென்று நிர்மல மாரியா மாவத்தைக்குத் திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் சென்றதும் சந்திக்கும் 10 அடி அகலமான பாதையின் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (வரிமதிப்பீட்டு இல. 26ஏ)

இவ்வாதனம் 2014.07.28 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.06.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008.06.02 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் 2008.06.05 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

7-336

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 74715669

திரு. ரஞ்சித் ரத்னசிறி ராஜபக்ஷ ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.06.20 ஆந் திகதிய 1868 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.06.06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2014.08.16 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ரைகம் கோரளை பல்லேபற்றுவில் இரத்மலானை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில்

இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைகளுள் இரத்மலானை வீதியில் அமைந்த "தியபொறகஹஓவிட"என யாவரும் அழைக்கப்படுவதுமான காணியின் நில அளவையாளர் W.A.R.S.பெரேரா தயாரித்த 2001, ஒற்றோபர் 04 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.0967 இல் விபரித்த துண்டு A1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டின் வடக்கு : பீ. கரோலிஸ் சில்வாவினதும் ஏனையோரினதும் காணியும் துண்டு A2 உம்; கிழக்கு: துண்டு A2 மற்றும் A3 உம்; தெற்கு : துண்டு A3 மற்றும் லுனா எலயும்; மேற்கு : லுனா எலயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல.0967 இன் படி இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.இது நுகேகொட தெல்கந்த காணிப் பதிவகத்தில் E 42/90 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 0967 இல் குறிப்பிட்ட தற்போதைய பாதைகளும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. எஸ். அலஹகோன் தயாரித்த 2008, ஒற்றோபர் 07 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 5908 இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரத்மலானையில் அமைந்த ஜயசுமனாராம வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 78/18 ஐக் கொண்ட "தியபொரகஹஓவிட்ட" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5908 இல் விபரித்த துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : பீ. கரோலிஸ் சில்வாவுக்கும் ஏனையோருக்கும் சொந்தமான காணியும் ; கிழக்கு : வரைபடம் இல. 0967 இல் துண்டு A2 உம் ; தெற்கு : 20 அடி அகலமான பாதையும் ; மேற்கு : வீதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5908 இன் படி இருபது பேர்ச் (0ஏ.0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள்,மற்றும் சகலதும் ஆகும்.

## இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட இரத்மலானையில் அமைந்த "தியபொரகஹ ஓவிட்ட" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 0967 இல் விபரித்த காணித்துண்டு A3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : காணித்துண்டு A1 மற்றும் A2 உம் ; கிழக்கு : துண்டு A2 மற்றும் தற்போதைய ரோட்டும் ; தெற்கு : தற்போதைய பாதையும் வரைபடம் இல. 4406/P இல் துண்டு A யின் பாகமும் ; மேற்கு : லுனாஎல துண்டு A1 எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 0967 இன் படி பத்து தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ.0றூ. 10.90பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இது நுகேகொடை தெல்கந்த காணிப் பதிவகத்தில் E 41/91 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ஜீ. எஸ். அபேநாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கல்கிசை,
2014, யூன் 17.

7-359

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73582945

பன்னிப்பிட்டிய, அரவ்வல, இல. 691/1 ஐச் சேர்ந்த திரு. வெலிவத்தகே டொன் கபில மற்றும் திருமதி எல்விற்றிகலகே டொன் தனுஜா ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.12.07 ஆந் திகதிய 1849 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.01.28 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2014.08.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

## அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் கெஸ்பேவ பட்டினசபை எல்லைகளுள் சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில் அரவ்வல வடக்கு 581/A இலக்க, கிராம அலுவலர் பிரிவில் அரவ்வல கிராமத்தில் அமைந்த பிரதான ரோட் வரிமதிப்பிலக்கம் 051 ஐக் கொண்ட மீகஹவத்த (பகுதி) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டி. பிரேமரத்ன தயாரித்த 1991, யூன் 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 104 இல் விபரித்த துண்டு 5A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : டி. எஸ். பத்திரகே மற்றும் ஏனையோரும் டி. ஜீ. பெரேராவும் உரிமை கோரும் மீகஹவத்தயும் (பகுதி) ; கிழக்கு : அரவ்வல ரோட்டும் ; தெற்கு : துண்டு 5B உம் ; மேற்கு : டி. எஸ். பத்திரண மற்றும் ஏனையோரும் உரிமைகோரும் மீகஹவத்தயும் (பகுதி) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 104 இன்படி இருபத்தேழு தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 27.37பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெலகந்த, நுகேகொடை காணிப்பதிவகத்தில் B 57/94 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். எம். ஜீ. ஜே. சீ. சிப்கடுவ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கொட்டாவ கிளை,
2013, திசெம்பர் 10.

7-358

**மக்கள் வங்கி – ஹிங்குராக்கொடை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**வடமத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுர பிரதேச வருமானப் பிரிவின் சிங்கள பத்துவ 71எச் பன்சல்கொடெல்ல கிராம அலுவலர் பிரிவின் பன்சல்கொடெல்ல எனும் ஊரில் அமைந்துள்ள தசம் இரண்டு எட்டு ஆறு (ஹெக். 0.286) விஸ்தீரணத்தைக் கொண்ட காணி மற்றும் அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் கட்டிடங்கள் போன்றவை மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2014.07.31 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.-** ஹிங்குரக்கொடை நகரத்திலிருந்து பின்பார ஊடாக பன்சல்கொடெல்ல வீதியில் 8 கிலோ மீற்றர் சென்றதும் சந்திக்கும் உல்கட்டுஎல சந்தியில், உல்கட்டு எல வீதியூடாக 250 மீற்றர் சென்றதும் வலதுபுறமாக குறித்த காணி அமைந்துள்ளது.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 2001.07.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2002.12.13 ஆந் திகதிய ''டெயிலி நியூஸ்'', ''தினமின'' ஆகிய பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** வெற்றிபெற்ற கொள்வனவாளர், ஏலத்தின் முடிவில் கீழ்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் இருப்பின் அக்கட்டணங்கள் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மீதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பொலன்னறுவை, புதிய நகரம், மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளரிடம் செலுத்த வேண்டும்.

உரித்து உரிமைகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 027-2224404, 2223900, 2225760 ; தொலைநகல் இல. : 027-2223522.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை, மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐ மீளச்செலுத்தாமல் விடவும் மற்றும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலதாரர்,
121 வருடங்களுக்கு மேலாக
மகோன்னத சேவை வழங்குநர்.

முன் அறிவித்தலின்றி ஏலத்தை பிற்போடவும் அல்லது நிறுத்தும் அதிகாரம் வங்கிக்குரியது.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

7-354

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

டபிள்யு. என். றொட்ரிகோ மற்றும் ஜீ. ரீ. எம். எம். பெர்னாண்டோ - கணக்கு இல. 0024 5002 2058

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2013.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.08.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2013.08.08 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்தேழு இலட்சத்து இருபத்தோராயிரத்து எண்ணூற்றிருபத்துநான்கு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூபா 57,21,824.42) 2013, மாச்சு 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%), மேலும் இருபத்தைந்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றுநான்கு ரூபா பதினாறு சதம் (ரூ. 25,71,594.16) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு

அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2014.07.31 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், முன்னகாரய (மன்குலியா), வோட் இல. 01, இல் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 49/15 ஐ ஏற்ற ''மன்குலியவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். மெண்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 4693 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வீதி (மாநகர சபை) ; கிழக்கு : உப்பளம் ; தெற்கு : ஷெல்டன் பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு : என்ட்டன் பெர்ணான்டோ உரிமை கோரும் காணி, ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் நான்கு ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 12.47பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4693 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 01 கீழே காட்டப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:-

மேற்கூறப்பட்ட முன்னகாரய (மன்குலிய), வோட் இல. 01, இல் அமைந்த ''மன்குலியவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் பீ. பீ. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1924, மே 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 840P எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்படாத 1/2 பகுதி காணியின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப் பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : எரோன் பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி ; கிழக்கு : லுனுபாலம ; தெற்கு : லியனகே ஜுவான் பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு : ஜுவான் சில்வா உரிமம் கோரும் காணி, ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்திரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 840P எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இல. A 317/208 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-356/1

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

பீ. ஏ. ஜீ. என். ஆர். குலரத்ன - கணக்கு இல. 0154 5000 1144

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.05.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.05.12 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐம்பத்தாறு இலட்சத்து நான்காயிரத்து முன்னூற்றைம்பத்தொன்பது ரூபா பதினைந்து சதம் (ரூ. 56,04,359.15) 2014, மாச்சு 28 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நாற்பத்தொன்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 49,72,500) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டி ருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட் டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.07.30 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவை பிரதேச செயலாளர் பிரிவின் மெத பத்துவையின் தமன்கடுவ கோரளே தமன்கடுவ பிரதேச சபை எல்லைகளுக்குள் உடவெலகம 124 கிராம அலுவலர் பிரிவின் உடவெலகம கிராமத்தில் அமைந்த காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005 திசெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1466 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஒன்று என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: இல. 90/03 எனும் வரைபடத்தின் லொட் 2; கிழக்கு : வீதிக்கான ஒதுக்கம் ; தெற்கு : 90/03 எனும் வரைபடத்தின் லொட் 04; மற்றும் மேற்கு: லொட் FPC 115 இன் ஒரு பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) அல்லது 0.2024 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் , நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள் .உட்பிரவேசங்கள் இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய

இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1466 எனும் வரைபடத்திற்கு அமைவாக பொலன்நறுவைக் காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் LDO B /5/92 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-356/2

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோறளை தெற்கு (மாறவில பதிவுப் பிரிவிற்குள்), யட்டகலன்பற்று, நாத்தாண்டி பிரதேச சபை எல்லைகளுக்குள், பஹல ஹட்டினிய கிராமத்தில் அமைந்துள்ளதும் "கஹட்டகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. செல்ரன் சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010.10.06 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 6533 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. எஸ். சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1984.07.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2022 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1 ஓர் உப பிரிவாகவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. எஸ். சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1986.06.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2022ஏ இல் குறிப்பிடப்பட்ட துண்டு 3 மீள் நிலஅளவையாகவிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டது மான காணியினது) ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 8 பே.)***

*(கடப்பாடுடையவர்களான மேற்கூறப்பட்ட குமாரகே வத்தகே நிவன்த ஷனக்க பெர்னாண்டோ மற்றும் வர்ணகுலசூரிய மேரி டொரீன் அனெஸ்ரா பெர்னாண்டோ மற்றும் ஈடுவைத்தவரான வர்ணகுலசூரிய மேரி டொரீன் அனெஸ்ரா பெர்னாண்டோ ஆகியோர், சிலாபத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. டபிள்யு. எஸ். என். திசேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2011, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 841 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. ஹப்புஹின்னி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010, திசெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 204 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- பேன் ஏசியா வங்கி, வென்னப்புவை கிளையிலிருந்து சிலாபம் வீதி வழியே சிலாபம் நோக்கிச் சென்று மாறவிலை சந்தியைக் கடந்து 56 ஆவது மைல் கல்லைத் தொடர்ந்து மேலும் ஏறக்குறைய 500 மீற்றர் செல்ல இடதுபக்கத்திலுள்ள இவ்வாதனத்தை அடையலாம்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை முறையே 2014, ஓகத்து 1 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2013.12.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.06.27 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் 3,000 ;

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர், சட்ட சம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667218, 011-2565573.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் பட்டய ஏலதாரர்.

இல.134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. 2873656, 0777 672082.
தொலைநகல் இல. : 2871184.

7-351

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.